In the Court of the Principal District and Sessions Judge, Dindigul

| | |
|---|---|
| Spl.C.C.No. 35/2014 | Prosecution witness P.W.24 |
| Name: Rajaram | Calling: |
| Father Name: | Religion: |
| Village: | Caste: |
| Taluk: | Age: |

Solemnly affirmed in accordance with the provisions of Indian Evidence Act X of 1873 on the day of 21.01.2026.

**(Accused present.)**

முதல் விசாரணை :–

நான் தற்போது மதுரையில் வசிக்கிறேன். நான் சென்னை சிறப்பு தலைமை பொறியாளராக பொதுப்பணித்துறை அலுவலகத்தில் பணியாற்றி 30.04.2011 ம் தேதி பணிநிறைவு பெற்றேன். ஜனவரி 2006 முதல் பிப்ரவரி 2009 வரை நான் தேனி பொதுப்பணித்துறை கட்டிடம் மற்றும் கட்டுமானம் பராமரிப்புக் கோட்டத்தில் செயற்பொறியாளராக பணியாற்றிவந்தேன். தலைமை பொறியாளர், பொதுப்பணித்துறை சென்னை அவர்களின் கடிதத்தின்படி கடித எண்.இ.1/2/1164/2007 நாள் 12.12.2007 ன்படி திண்டுக்கல் ஊழல் தடுப்பு கண்காணிப்புப்பிரிவு ஆய்வாளர் திரு.சத்தியசீலன் மற்றும் பெரியகுளம் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர், ஆண்டிபட்டி உதவி பொறியாளர் அவர்கள் சகிதம் திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா, விராலிப்பட்டி கிராமத்தில் வனச்சரகர் திரு.சொக்கலிங்கம் அவர்களின் மனைவி, மகன் மற்றும் மருமகன் ஆகியோர்களின் பெயர்களில் உள்ள பட்டா, புறம்போக்கு மற்றும் பூமிதான நிலங்கள் ஆகியவற்றை வருவாய் அலுவலர்கள் திரு.தனுஷ்கோடி, வருவாய் ஆய்வாளர், கே.பாலகுரு, பிர்கா சர்வேயர், நிலக்கோட்டை தாலுகா திரு.சி.சுப்புராயன், விஏஓ, வத்தலக்குண்டு ஆகியோர்கள் அடையாளம் காட்டிய இடத்தில் 09.01.2008 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1.30 மணிவரை

அந்த நிலங்களில் அமைக்கப்பட்ட கல்தூண்கள் மற்றும் முள்வேலிகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்வதற்காக ஆய்வு செய்து அன்று ஆய்வாளர் திரு.சத்தியசீலன் அவர்கள் மேற்கொண்டு நடவடிக்கை தயார் செய்தார். மேற்படி ஆய்வாளர் தயார் செய்த நடவடிக்கை குறிப்பில் அனைத்து அலுவலர்களும் கையெழுத்து செய்தோம். நானும் கையெழுத்து செய்தேன். அந்த நடவடிக்கை குறிப்பி ஏற்கனவே அதசாஆ.62 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. வனச்சரகர் சொக்கலிங்கத்தின் பிரதிநிதியாக இருந்த திரு.குமார் அவர்களிடம் நடவடிக்கை குறிப்பு நகல் கொடுத்து கையொப்பம் பெறப்பட்டது. பின்பு அதே நாளில் மதியம் 2 மணி முதல் 4.45 மணிவரை தேனி மாவட்டம், குல்லபுரம் கிராமத்தில் உள்ள வனச்சரகர் சொக்கலிங்கத்தின் உறவினர்களுக்கு சொந்தமான பட்டா நிலங்கள் மற்றும் புறம்போக்கு நிலங்களில் உள்ள கல்தூண்கள், முள்வேலி மற்றும் ஆழ்குழாய் கிணறுகள் ஆகியவற்றை மதிப்பீடு செய்யும்பொருட்டு குழுவினருடன் ஆய்வு செய்து மேற்படி நிலங்களை வருவாய் அலுவலர்கள் அடையாளம் காட்டியதை ஆய்வு செய்தேன். வருவாய் ஆய்வாளர் ஜே.கே.ஆர்த்தி, கே.அன்பழகன், பிர்கா சர்வேயர், எஸ்.சங்கரமூர்த்தி, விஏஓ, பி.தனுஷ்கோடி, வருவாய் ஆய்வாளர், திரு. கே.பாலகுரு, பிர்கா சர்வேயர், திரு. சுப்புராயலு, விஏஓ ஆகியோர்களுடன் திரு சத்தியசீலன், ஆய்வாளரும் இருந்தார். பின்னர் திரு.சத்தியசீலன் அவர்கள் தயாரித்த நடவடிக்கை குறிப்புக்களில் அனைவரும் கையொப்பமிட்டு நகல் ஒன்றை திரு.குமார் என்பவரிடம் கொடுக்கப்பட்டது. அவரிடம் ஒப்புதல் பெறப்பட்டது. அந்த நடவடிக்கை ஏற்கனவே அதசாஆ.12 ஆக குறியீடு செய்யப்பபட்டுள்ளது.

பின்னர் விராலிப்பட்டி கிராமத்தில் மதிப்பீடு செய்தவகையில் ரூ.5,07,197/- என மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்தேன். குல்லபுரம் கிராமத்தில் மதிப்பீடு செய்தவகையில் ரூ.13,05,808/-என மதிப்பீட்டு அறிக்கை தயார் செய்தேன். என்னுடைய மதிப்பீட்டு அறிக்கையை கடித

எண்.14/CF1/2007/SUPDT/dated 14.02.2008 ன்படி அசல் மதிப்பீட்டு அறிக்கையை ஊழல் தடுப்பு பிரிவு இயக்குநர், சென்னை அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். அதன் நகலை திண்டுக்கல் ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் அவர்களுக்கு அனுப்பி வைத்தேன். மதிப்பீட்டு அறிக்கையை விலைபட்டியல் 2000–2001 ஆண்டிற்கான Schedule of rates ன்படி மேற்படி முள்வேலி, கல்தூண் மற்றும் ஆழ்துளை கிணறு ஆகியவற்றை மதிப்பீடு செய்து அறிக்கை சமர்ப்பித்தேன். கடித எண்.14/CF1/2007/SUPDT/dated 14.02.2008 அதசாஆ.81. விராலிப்பட்டி கிராமத்திற்குரிய மதிப்பீட்டு அறிக்கை அதசாஆ.82. குல்லபுரம் கிராமத்திற்குரிய மதிப்பீட்டு அறிக்கை அதசாஆ.83. மேற்படி கிராமத்தில் உள்ள நிலங்கள் 2000–2001ம் ஆண்டில் இருந்த நிலத்தின் நிலைமை நான் ஆய்வு செய்த போது அறியமுடியாததால் அந்த நிலங்களை சமன்படுத்தி சீர்படுத்தியதற்கான மதிப்பீடு என்னுடைய அறிக்கையில் சொல்ல இயலவில்லை. இந்த வழக்கு சம்மந்தமாக என்னை காவல்துணை காண்காணிப்பாளர் விசாரித்தார்.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–

2008ம் வருடம் நான் தேனிமாவட்டத்தில் பணிபுரிந்து வந்தேன் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்திற்கு தனியாக செயற்பொறியாளர் இருந்தார் என்றால் சரிதான். தேனி மாவட்டத்தில் உள்ள குல்லபுரம் கிராமத்தில் ஆய்வு செய்தபோது ஆய்வாளர் திரு.சத்தியசீலன் இருந்தார். தேனிமாவட்டத்தை சேர்ந்த ஊழல் தடுப்பு பிரிவு ஆய்வாளர் இல்லை என்றால் சரிதான். விராலிப்பட்டியை ஆய்வு செய்தபோது சத்தியசீலன் ஆய்வாளர் இருந்தார். விராலிப்பட்டியில் ஆய்வு செய்தபோது திண்டுக்கல் மாவட்டத்தை சேர்ந்த பொதுப்பணித்துறை அதிகாரிகள் இருந்தார்களா என்றால் யாரும் இல்லை. மேற்படி இரண்டு கிராமங்களில் உள்ள இடங்களை ஆய்வு செய்து மதிப்பீட வழங்கும்படி எழுத்து பூர்வமாக எனக்கு வேண்டுகோள் கடிதம்

கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னை ஆய்வாளர் விசாரணை செய்தபோது வழக்குச்சொத்து சம்மந்தமாக என்னென்ன ஆவணங்கள் பார்த்தேன் என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் ஆவணங்களை பார்க்கவில்லை. ஆய்வாளர் அடையாளம் காட்டியதை ஆய்வு செய்து மதிப்பீடு செய்தேன். 09.01.2008 நடவடிக்கை குறிப்புக்களை யார் தயார் செய்து எழுதினார்கள் என்ற குறிப்போ மற்றும் பதிவுகளோ அந்த ஆவணத்தில் இல்லை என்றால் சரிதான். நான் வழங்கிய மதிப்பீட்டு அறிக்கைகளில் இந்த வழக்கு சம்மந்தப்பட்ட சொத்துக்களின் பரப்பளவு பற்றி குறிப்பிடவில்லை என்றால் சரிதான். மேலும் எந்தஎந்த சர்வே எண்களில் உள்ள நிலங்களில் முள்வேலி, கல்தூண் போடப்பட்டிருந்தது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மதிப்பீட்டு அறிக்கைகள் அதசாஆ.82 மற்றும் 83ல் எவ்வளவு அளவிற்கு முள்வேலி போடப்பட்டிருந்தது என்பதை குறிப்பிட்டுச் சொல்லியுள்ளேன். ஆனால் எந்த எந்த சர்வே எண்களில் போடப்பட்டிருந்தது என்று குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஆழ்துளை கிணறு எவ்வளவு ஆழம் என்பதை குறிப்பிட்டுள்ளேன். எவ்வளவு அளவு தண்ணீர் இருந்தது என்பதை குறிப்பிடவில்லை. மொத்தம் 12 போர் போடப்பட்டுள்ளது. அதற்கு தனித்தனியாக ஆழம் குறிப்பிட்டுள்ளேன். நான் ஆய்வு செய்த காலகட்டத்தில் கல்தூண், முள்கம்பி, முள்வேலி ஆகியவற்றிற்கு மார்க்கெட் மதிப்பு எவ்வளவு என்பதை வேறு நிறுவனங்களில் ஏதேனும் பெற்று தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆழ்துளை கிணற்றில் உள்ள மோட்டார், பைப், தளவாட சாமான்கள் பற்றி நான் எனது அறிக்கையில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். தளவாட சாமான்கள் 2000-2001 காலகட்டங்களில் அதன் விலை என்ன என்பதையும் நான் குறிப்பிட்டு அறிக்கையில் சொல்லவில்லை என்றால் சரிதான். ஆழ்துளை கிணறு ஒவ்வொன்றும் எவ்வளவு ஆழம் உள்ளது என்பதை எவ்வாறு அளவீடு செய்தோம் என்றால் நூலில் கல்லைக்கட்டி

கிணற்றில் விட்டு ஆழத்தை அளவீடு செய்தேன். நான் அவ்வாறு அளவீடு செய்தது துல்லியமாக இருக்காது என்றும் தோராயமாகத்தான் இருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. ஒவ்வொரு நிலத்தில் தன்மைக்கேற்ப நீறுற்று வரும் என்றால் சரிதான். அந்த ஆழ்துளை கிணறுகள் யாரால் எந்த கால கட்டங்களில் அமைக்கப்பட்டது என்பது எனக்கு தெரியாது. அது சம்மந்தமாக நான் யாரையும் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அசாஆ 82, 83 மதிப்பீட்டு அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள நிலங்கள், ஆழ்துளை கிணறுகள் எதிரி சொக்கலிங்கம் பெயரில் இல்லை என்றால் அது பற்றி எனக்குத் தெரியாது. ஆழ்துளை கிணறுகளில் என்னவகை பைப் போடப்பட்டிருந்தது என்றால் அதை என்னால் கண்டுபிடிக்க முடியவில்லை. முள்கம்பிகள், கல்தூண்கள், மணல், சிமிண்ட், பைப்புகள் ஆகியவை ஒவ்வொரு காலகட்டத்திற்கு ஏற்றார்போல் விலை இருக்கும் என்றால் சரிதான். நான் வழங்கிய அறிக்கைகள் அதசாஆ.82, 83 ல் குறிப்பிடப்பட்டுள்ள மதிப்புகள் ஊழல் தடுப்பு ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. குறைவான மதிப்பீடு உள்ள நிலையில் நான் அதை மிகைப்படுத்தி அறிக்கை வழங்கியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழங்கியுள்ள அறிக்கைகளில் குறிப்பிட்டுள்ள நிலங்களும், இந்த எதிரிக்கும் எவ்வித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல

மறு விசாரணை –இல்லை

A MUTHUSARATHA
Digitally signed by A MUTHUSARATHA
Date: 2026.01.21 18:10:19 +0530

Principal District Judge,
Dindigul.